தலைவர்
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காக நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டரீதியான மற்றும் நியமங்களின் தேவைகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வதிபதியின் அறிக்கை

1. நிதிசார் அறிக்கைகள்

1.1 அபிப்பிராயம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர பணியகத்தின் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அடிப்படை காரணம்

கீழ் குறிப்பிடப்படும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதவிக்காக வெளிநாடு செல்லும் உழைப்பாளர்களின் விமானச் சீட்டுக்களினை கொள்வனவு செய்வதற்காக உழைப்பாளர்களிடமிருந்து அறவிடப்படும் பணத்தில் விமானச் சீட்டுக்களினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் எஞ்சிய மொத்தம் ரூ.2,615,836 பணமானது உரிய உழைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டுமாயினும் அவ்வாறு செலுத்தாது பணியகத்தின் வருமானமாக எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க வருடத்தின் வருமானம் அந்த அளவினால் அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது

ஆ) பணியகத்தின் கணனிமயப்படுத்தப்பட்டிருந்த முறைமைக்கு இணங்க, பேரேட்டுக் கணக்குகளில் உட்புகுத்தப்பட்டிருந்த அந்நிய நாணயமாற்று இலாபம் ரூ. 176,892,642ஆக இருந்தாலும் நிதிப் பெறுப்பேற்று கூற்றில் அது ரூ.167,445,298 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க வருடத்தின் இலாபம் ரூ.9,447,344 அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வு வருடத்திற்குரிய நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த வரிச் செலவு மற்றும் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணக்கிடலுக்கு இணங்க கீழ் குறிப்பிடப்படும் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

I. நிதிக் கூற்றுக்களில் வருடத்தின் வருமான வரிச் செலவு ரூ.337,642,312 ஆக காட்டப்பட்டிருந்ததுடன் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணக்கிடலுக்கு இணங்க அதன் பெறுமதி ரூ.476,881,608 ஆனாலும் வருடத்தின் வரிச் செலவு ரூ.139,239,296 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

II. நிலையாண சொத்துக்களினை கைப்பற்றல் மற்றும் நீக்குதல்களுக்குரிய நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த வரிச் செலவு மற்றும் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணக்கிடலுக்கிடையில் மொத்தம் ரூ.30,587,569 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) கட்டபுலனாகா சொத்துக்கள் சம்பந்தமாக மொத்த பெறுமதியினை மதிப்பிடும் பொழுது நிருவாக கம்பனியான வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனியின் கட்புலனாகாக சொத்துக்களில் மீளாய்வு வருடத்திற்குரிய முறைமையானரூ.300,000 தொகையானது நிதிக்கூற்றுக்களில் ஒப்பிடப்படாதிருந்தது.

(உ) நிதிக் கூற்றுக்களின் குறிப்பிற்கிணங்க காலம் முதிரும் வரை தக்க வைக்கப்பட்டிருந்த முதலீட்டு பயன்தரு வட்டி விகிதம் முறைமையில் பேரில் (Effective Interest Rate) படிப்படியானதேய்வுபெறுமதிக்கு அளவீடு நிகழ்த்தப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பிரதிக்கினைப்படுத்தப்பட்ட வட்டி விகிதம் (Coupon Interest Rate)பேரில் கணக்கிடப்படும் வட்டி, முதலீட்டு வருமானமாக அடையாளம் காணப்பட்டிருந்தது.

(ஊ) பணியகத்திற்குரிய மொத்தம் ரூ. 328,071,264 பெறுமதியான நிலையாண வைப்புக்கள் 10 பல்வேறு கடன் முதலீட்டு முறைமைக்கு உரியதாக நிதி நிறுவனங்களில் பிணை வைப்பாக வைக்கப்பட்டுள்ளதுடன் அது சம்பந்தமாக நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்படாதிருந்தது.

(எ) பயிற்சி மத்திய நிலையங்கள் 03 இனை நிர்மாணிப்பதற்காக திறைசேரியினால் கிடைக்கப்பெற்றிருந்த ரூ.691,161,789 மூலதன அளிப்புக்கள் சம்பந்தமாக 2019 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 21 ந் திகதிய இலக்கம் PED/Capital/2017-1உடைய அரச வியாபார திணைக்களத்தின்

ஆலோசனையின் பிரகாரம் பிரதான பங்களிப்பு முலதனமாக கருத்திற் கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க நிதிக் கூற்றுக்களில் ஒப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கணக்கீட்டு குறிப்பினால் வெளிக்காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அளிப்பாக அடையாளம் காணப்பட்டிருந்த நிதியானது உரிய சொத்து என்பது பற்றிய இலங்கை கணக்கீட்டு அளவீட்டு இலக்கம் 01 இன் பந்தி இலக்கம் 134 மற்றும் 135 இன் பிரகாரம் தேவையான வெளிக்காட்டல்கள் நிகழ்த்தப்படாதிருந்தது.

(ஏ) 2018 ஆம் ஆண்டு 01 ந் திகதி தொடக்கம் காலம் முதிரும் வரை தக்க வைக்கப்பட்டிருந்த முதலீடுகள் சம்பந்தமாக கணக்கிடல் SLFRS 09இனை கடைப்பிடித்து நிகழ்த்தப்பட்டாலும், அதற்காக SLFRS 07 மற்றும் LKAS 32, 39இனை கடைப்பிடிக்கப்பட்டிருந்ததாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக செலுத்தப்படவிருந்த ரூ.6,261,168 தண்டப் பணத்தினை செலுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அனுமதி அறிக்கையிடப்படும் காலஇடைவெளியின் பின்னர் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பதாக கிடைக்கப் பெற்றிருந்தாலும் அது சம்பந்தமாக இலங்கை கணக்கீட்டு அளவீட்டு இலக்கம் 10 இன் பிரகாரம் தேவையான ஒப்பீடு நிதிக்கூற்றுக்களில் நிகழ்த்தப்படாதிருந்தது

ஒ) பணியகத்தினால் நீண்ட கால சேவை பிரதிபலன் நிதியத்திற்குரியதாக திட்டமிடப்பட்ட சொத்து பேணப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் வருட முடிவில் அதன் மீதி ரூ.151,637,722 ஆக இருந்தது. பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி 2018 ஆம் வருடத்தில் அது ரூ.137,976,269 ஆக குறைவடைதிருந்தது. அவ்வாறே இந்த சொத்துக்கள் மற்றும் பணியகத்தின் முதலீடுகளுக்கு ஒதுக்கப்பட்டு அதற்குரிய ஒப்பீடுகள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாதிருந்தது. அதற்கிணங்க இலங்கை கணக்கீட்டு அளவீட்டு இலக்கம் 19 (LKAS 19)இற்கிணங்க நீண்டகால சேவை பிரதிபலன் நிதியத்திற்குரிய சொத்துக்களினை பேணும் நோக்கத்தினை நிறைவேற்றும் விதம் இந்த சொத்துக்களினை பேணப்படாமை அவதானிக்கப்பட்டது.

(ஓ) இலங்கை கணக்கீட்டு அளவீட்டு இலக்கம் 21 இன் 23 வது பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு அந்நியச் செலாவணியினை பயன்படுத்தி நிகழ்த்தப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய கணக்கு மீதியின் இறுதி நாணயமாற்று விகிதத்தினை அடிப்படையாகக் கொண்டு மாற்றப்பட இயலுமாயினும் கணக்காய்வு எழுமாறான பரிசீலனைக்கு உட்படுத்திய தொடர்ந்து வரும் காலங்களில் செலுத்தல் கணக்கிற்கு உரிய பணியகத்தின் கணக்கு முறைமை மூலம் கணக்கிடப்பட்ட மொத்தம் ரூ.11,024,393 ஆன வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது.

(ஔ) பணியகத்தினால் தொழிலுக்காக வெளிநாடு செல்லும் உழைப்பாளர்களுக்காக விமானச் சீட்டுக்களினை கொள்வனவு செய்வதற்குரியதாக கிடைக்க வேண்டிய தொகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூ.1,702,912 பெறுமதிக்குரிய மூல கடிதங்கள் மற்றும் விரிவான விபரமுடைய அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்தது.

(க) விமானச் சீட்டுக்களின் பொறுப்பு கணக்குகளுக்குரிய அட்டவணையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிற்கு செலுத்த வேண்டியதாக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக ஒழுங்குமுறையாக ரூ.929,361 மற்றும் ரூ.812,593 மீதிகள் 2018 ஆம் ஆண்டு மேல் மாகாண சபைக்கு செலுத்த வேண்டியதாக ரூ.1,035,830 மீதியும் காட்டப்பட்டிருந்ததுடன் இந்த கொடுப்பனவு எந்த கடமைக்காக என உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய சாட்சிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு அளவீடுகளுக்கு (இ.க.அ) இணங்கியதாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு அளவீடுகளின் கீழ் எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது.

1.3 நிதிக் கூற்றுகள் பற்றிய முகாமைத்துவம் மற்றும் கட்ப்பாட்டினை மேற்கொள்ளும் திறத்தவரின் பொறுப்புக்கள்.

இந்தநிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் வஞ்சகம் அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அளவிலான போலியான பிரதிக்கனை இன்றி நிதிக் கூற்றுக்களினைத் தயாரிப்பதற்கு இயலுமான விதம் தெவையன உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களினைத் தயாரிக்கும் பொழுது, பணியகத்தினை தொடர்ச்சியாக பேணும் இயலுமையினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவம் பணியகத்தினை முடிவுறுத்துவதற்கு யோசிக்குமாயின் அல்லது வேறு மாற்றுவழிகள் இல்லாதவிடத்து செயற்பாட்டினை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாயின் தவிர தொடர்ச்சியாக பேணுவதற்கு உரிய விடயங்களினை தெளிவுப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பணியகத்தின் நிதி அறிக்கை நடவடிக் சம்பந்தமான பொறுப்பு, முகாமைத்துவத்தினை மேற்கொள்ளும் திறத்தவர்களினால் தாங்கிக் கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், பணியகத்தின் வருடாந்த மற்றும் காலத்திற்கேற்ற நிதிக்கூற்றுக்களினை தயாரிப்பதற்கு இயலுமானவாறு தனது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளினைப் பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுநிதிக்கூற்றுக்கள், வஞ்சகம் மற்றும் தவறு காரணமாக ஏற்படும் அளவீடுரீதியான போலியான பிரதிக்கினையற்ற நியாயமான உறுதிப்படுத்தலினை வழங்கல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையினை வழங்கல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தலாயினும், இலங்கை கணக்காய்வு அளவீட்டின் பிரகாரம் கணக்காய்வினை நிகழ்த்தப்படும்பொழுது அதனை எப்பொழுதும் போதுமானளவு குறைந்தளவான பிரதிக்கினையில் தெளிவுப்படுத்துவதனை உறுதிப்படுத்தல் அல்லாததாகும். வஞ்சனை அல்லது தவறு தனி அல்லது கூட்டான தாக்கம் காரணமாக அளவீட்டுரீதியான குறைந்தளவான பிரதிக்கினை ஏற்படக்கூடியதுடன், இந்த நிதிக்கூற்றினை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளரினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்களில் தாக்கம் ஏற்படக்கூடும் என எதிர்ப்பாரக்கப்படுகின்றது.

என்னால் தொழில்ரீதியான தீர்மானம் மற்றும் தொழில் ரீதியான ஐயத்துடன் இலங்கைகணக்காய்வு அளவீடுகளின்பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- வஞ்சனை அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவான பிரதிக்கினைகளின் அவதானத்தினை அடையாளம்காணும்பொழுது மற்றும் மதிப்பீடு செய்யும்பொழுது சந்தர்ப்பத்திற்கிணங்க உரியகணக்காய்வு முறைமைகளினை திட்டமிடல் மூலம் வஞ்சனை அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அவதானத்தினை தவிர்த்துக்கொள்வதற்கு, போதுமானளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளினைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். போதுமானளவு போலியான பிரதிக்கினைகளினால் ஏற்படும்தாக்கத்தினைவிட வஞ்சனையினால் நிகழும்தாக்கம் அதிகமானதுடன், துஷ்பிரயோகம், போலியான ஆவணங்களினைத் தயாரித்தல், வேண்டுமென செய்யும், போலியான ஆவணங்களினைத் தயாரித்தல், வேண்டுமெனசெய்யும் தவிர்த்தல் அல்லது உள்ளகக்கட்டுப்பாட்டினைத் தவிர்த்தல் என்பன வஞ்சனை ஏற்படுவதற்கான காரணமாகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறான கணக்காய்வு முறைமையினை திட்டமிடல்பொருட்டு சபையின் உள்ளகக்கட்டுப்பாடு சம்பந்தமான புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்ள இயலுமாயினும், உள்ளகக் கட்டுப்பாட்டின் வெற்றிகரமான தன்மைப்பற்றிய எண்ணத்தினை பிரதிக்கினைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்படமாட்டாது.

- பயன்படுத்தப்படும் கணக்கீட்டுக்கொள்கைகளில் மற்றும் கணக்கிடப்படும் மதிப்பீடுகளின் பொதுவான தன்மை மற்றும் முகாமைத்துவதுத்தினால் மேற்கொள்ளப்படும் தொடர்புடைய வெளிக்காட்டல்களில் பொருத்தமானதன்மை பெறுமதியிடப்படும்.

- நிகழ்வுகள் அல்லது தன்மை காரணமாக பணியகத்தின் தொடர்ச்சியான நிலைத்துநிற்றல் பற்றிய அளவீட்டுரீதியான நிச்சயமற்றதன்மை உள்ளதா என்பது சம்பந்தமான பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுசாட்சிகளின் அடிப்படையில் கணக்கிடலுக்காக பணியகத்தின் தொடர்ச்சியானநிலைத்துநிற்கும் தன்மைப் பற்றிய அடிப்படையினை பயன்படுத்தும் உரித்து தீர்மானிக்கப்படும். போதுமானளவுநிச்சயமற்றத்தன்மை உள்ளது என்பதற்கு என்னால் தீர்மானிக்கப்படுமாயின் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமாக வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கைகையில் அவதானம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதல்லாவிடின் எனது அபிப்பிராயம் மாற்றம் மேற்கொள்ளல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வு அல்லது நிலைமையின்பேரில் தொடர்ச்சியாகநிலைத்துநிற்றல் முடிவுறுத்தப்பட இயலும்.

- வெளிப்படுத்தல் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல் மற்றும் நிகழ்வுகள் உசித்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பிடல்,

  எனது கண்காய்வினுள் அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக நிருவாகத்தின் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி கட்டுப்பாட்டினை மேற்கொள்ளும் திறத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2. ஏனைய சட்டமாக்கப்பட்ட மற்றும் நியமங்களின் அவசியம் பற்றிய அறிக்கை

கடைப்பிடிக்கப்படும் நடைமுறைவழிகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சிகளின் பேரில் மற்றும் அளவீட்டு ரீதியிலான விடயங்களின் எல்லைப்படுத்தலினுள், கீழ் குறிப்பிடப்பட் பிரதிக்கினையினை வழங்குவதற்காக எதுவும் எனது அவதானத்திற்கு உட்படவில்லை.

- 2018 ஆண்டின் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டிருந்த தேவைக்கு இணங்க பணியகத்தின் நிருவாகச் சபையில் சில அங்கத்தவருக்கு நிறுவனத்துடன் தொடர்புற்று சில உடன்படிக்கைகள் நேரடியாக அல்லது ஏனைய விதம் பொதுவான வியாபார நிலைமையில் வெளியிலான தொடர்பு உள்ளது என்பது.

  2018 ஆண்டின் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (**உள**) பிரிவின் தேவைக்கு இணங்க கீழ் குறிப்பிடப்படும் அவதானிப்பு தவிர ஏதாவது உரிய எழுத்து மூலமான சட்டத்திற்கு பணியகத்தின் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட வேறு பொது மற்றும் விசேட ஒழுங்குவிதிகளுக்கு இணங்காத விதம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது.

சட்டஒழுங்குகள்/ கட்டளை குறிப்புரை	விபரம்
(அ)1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்பு பணியகச் சட்டம்	
I. 52(1) பிரிவு	அனுமதிப்பத்திரத்திற்கு உரித்தானவரினால் பெற்றுக் கொள்ளப்படும் அனைத்து தரகுப் பணத்திலும் நூற்றுக்கு 05 விகிதம் கணக்கிடப்படும் செஸ் வரி அறவிடப்படல் வேணடுமாயினும், ஒழுங்குமுறையிலான அனுமதியின்றி குடியகழும் வீட்டுப்பணிப்பெண்கள் சம்பந்தமாக, அவர்களுக்காக வெளிநாட்டு கணவான்களினால் பெற்றுக் கொள்ளப்படும் தரவு தொகையினை கருத்திற் கொள்ளாது ஒரு குடியகழும் வீட்டுப் பணிப்பெண்ணுக்காக ரூ.5000 செஸ் வரியினை மாத்திரம் அறவிடுவதற்கு பணியகம் தீர்மானித்திருந்தத
II. 42(2) பிரிவு	பணியகத்தின் யோசனை தீர்மானம் இன்றி மற்றும் தொழிலாளர் நலனோம்பு நிதியினை ஆரம்பிக்கும் நோக்கத்திற்கு முரணாக மீளாய்வு வருடத்தினுள் மொத்தம் ரூ.499, 473, 516 பணியகத்தின் ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அறநிதியினால் செலுத்தப்பட்டிருந்தது.இதற்கு மேலதிகமாக பணியகத்தில் வருடாந்த பொது செலவுகளில் 5% அதாவது ரூ.12,018,115 தொகையானது இந்த நிதிக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. பணியகச் சட்டத்தின் 48(ஆ) பிரிவின் பிரகாரம் தொழிலுக்காக வெளிநாடு செல்லும் உழைப்பாளர்களினை பயிற்றுவித்தல் மற்றும் பழக்கப்படுத்துவதற்காக இந்த அறநிதி பயன்படுத்தப்பட வேண்டுமாயினும் மீளாய்வு வருடத்தினுள் அதற்காக எவ்வித செலவுகளும் செய்யப்படாதிருந்ததுடன் மொத்தச் செலவான ரூ. 1,308,838,726இல் 22% மாத்திரம் வெ ளிநாட்டிலுள்ள உழைப்பாளர்களின் நலனோம்பிற்காக செலவிடப்பட்டிருந்தது

III. சட்டத்தின் IIபகுதியில் 17 வது பிரிவில் 3 வது உப பிரிவு

பணியகத்தின் நிதி செலவிடக்கூடிய நிதிக்கு முரணாக, ஒழுங்குமுறையான அனுமதியின்றி பணியகத்தின் அலுவலக ஆளனியினருக்காக வைத்திய பற்றுச்சீட்டு முறைமை 1995 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன் வருடாந்தம் அதற்குரிய பூரணமான நஷ்ட ஈட்டுத் தொகை பணியகத்தின் வருமானத்தினை பயன்படுத்தி செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வு வருடத்தில் மொத்தம் ரூ.44,287,888 வைத்திய நிவாரணமாக அந்த முறைமையின் கீழ் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

IV. 45(1) பிரிவு

தொழிலாளர் நலனோம்பு நிதியில் கொடுக்கல் வாங்கல்கள் வேறாக வங்கி கணக்கு மூலம் நிகழ்த்தப்பட்டு அதற்கிணங்க நிதிக் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். நலனோம்பு நிதியில் கொடுக்கல் வாங்கல்களினை மேற்கொள்ளும் வங்கி கணக்கில் உள்ளடங்கிய கிடைப்பனவு, கொடுப்பனவு மற்றும் நிதிக்கூற்றுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ள கிடைப்பனவு, கொடுப்னவுகளுக்கிடையல் ஒழுங்குமுறையாக ரூ.886,926,541 தொகை மற்றும் ரூ.594,263,038 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. நிதி சம்பந்தமாக வேறான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிராததுடன் இந்த வேறுப்பாட்டுக்கான காரணத்தினை தெளிவாக அடையாளம் காண இயலவில்லை.

(ஆ) இலக்கம் 30/2008 உடைய அரச நிருவாக சுற்றுநிருபம்

சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்ட ரூ.250,000 எல்லையினை விஞ்சி அனுமதியின்றி பணியகத்தினால் ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாழ்வாதார செலவுக் கொடுப்பனவு, அவதானம் கொடுப்பனவு, பதிற் கடமையாற்றல கொடுப்பனவு மற்றும் ஒப்பீட்டு கொடுப்பனவு உட்பட 12 மாத மொத்த சம்பளத்திற்கு சமமான அளவு இடர் கடனாக செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.அதற்கிணங்க மீளாய்வு வருட முடிவில் பணியகத்தில் இடர் கடன் மீதியின் மொத்தம் ரூ.325,149,295 இருந்ததுடன் ரூ.500,000 இற்கு அதிகமான இடர் கடன் மீதி 137 மற்றும் ரூ.1,000,000 இனை விட அதிகமான கடன் மீதிகள் 04 அம் மீதியில் இருந்தது.

(இ)	2003 யூன் 02 ந் திகதிய இலக்கம் பிஈடி/12 உடைய அரச வியாபார சுற்றுநிருபத்தின் 9.7 பிரிவு	பணியகத்தின் அலுவலர்களுக்கு வழங்கப்படும் தொழில்நிபுணத்துவ கொடுப்பனவு, வருடாந்த காப்புறுதி கொடுப்பனவு, வருடாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு, விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு , போக்குவரத்து கொடுப்பனவு,கடன் வட்டி மீள் நிரப்பல், வைத்திய பற்றுச்சீட்டு மீள் நிரப்பல் என்பவற்றுக்கு மேலதிகமாகதிறைசேரிச் செயலாளரின் அனுமதியினை பெற்றுக் கொள்ளாது பணியகத்தினால் தயாரிக்கப்பட்ட நியமங்களின் பிரகாரம் 06 முறைமைகளின் கீழ் மொத்தம் ரூ.86,399,621 அலுவலக ஆளனியினர் கொடுப்பனவினை செலுத்துவதற்கு பணியகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.	
ஈ)	பொது நிதி சுற்றறிக்கை இல 02/2015 10 யூலை 2015 ஆம் திகதி	நவம்பர் 01, 2019 ஆம் திகதிய கணக்காய்வின்படி, 2015 ஆம் ஆண்டில் வாகனங்களில் பாவனையிலிருந்து அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட வாகனங்களை பணியகத்தினால் பாவனையிலிருந்து அகற்றமுடியாமல்போனது.	27 15

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைக்கு இணங்க பணியகத்தின் அதிகாரம், செயற்காடுகள் மற்றும் கடமைப்பொறுப்புக்களுக்கு இணக்கமற்ற விதம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைக்கு இணங்க பணியகத்தின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக பயனுள்ளதாக கால எல்லையினுள் உரிய சட்டத்திட்டங்களுக்கு இணங்கியதாக வழங்கப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பது.

3. வேறு கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஜனவரி மாதம் வரையான கால எல்லைக்கு உரிய ஊழியர் சேமலாப நிதியினை கணக்கிடும் பொழுது பணியகத்தின் ஊழியர்களுக்கு செலுத்தப்படும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவினைக் கருத்திற் கொள்ளப்பட்டிராததுடன் தொழில் ஆணையாளரின் ஆலோசனைக்கு இணங்க தொழில்தருநர் மற்றும் தொழிலாளர் என்னும் இரு திறத்தவரின் பங்களிப்புத் தொகை பணியகத்தினால் செலுத்தப்படல் வேண்டும். அதற்கிணங்க மொத்தம் ரூ.47, 912,231 மாத்திரம் பணியகத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) பணியகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வெ ளிநாட்டு தூதுவர் சபைகள் 16 இற்காக 2018 டிசம்பர் 31 ந் திகதியில் அலுவலர்கள் 135 பேர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எனினும்

அதற்காக அனுமதிக்கப்பட்ட சபை அல்லது ஆட்சேர்ப்பு முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க ஒவ்வொரு தூதுவர் சபைக்குமாக தேவையான தகைமைப் பெற்ற அலுவலக ஆளனியினர் சரியாக அடையாளம் காணப்பட்டு உரிய நியமனம் நிகழ்த்தப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தலினைப் பெற்றுக் கொள்ளப்பட இயலாது. அவ்வாறே அந்த அலுவலக ஆளனியினருக்காக வழங்கப்படும் வசதிகள் மற்றும் கொடுப்பனவுகளுக்காக ஒழுங்குமுறை தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த அலுவலர்களின் சம்பளம் மற்றும் ஏனைய வசதிகளுக்காக மீளாய்வு வருடத்தினுள் மொத்தம் ரூ.663,811,831 தொகையானது செலவிடப்பட்டிருந்ததுடன் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டவர்களின் நேரடிச் செலவுகளுக்காக ரூ.80,771,306 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இதற்கிணங்க தூதுவர் சபைகளின் மொத்தச் செலவு 89% அலுவலக ஆளனியிர் பேணலுக்காக செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 1988 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட் குடியகழ்ந்த உழைப்பாளர்களின் பங்களிப்பு நிதி முறைமைக்கு உரிய நிதியில் 2018 டிசம்பர் 31 ந் திகதியில் குடியகழ்ந்த உழைப்பாளர்கள் 1,573 பேர்களுக்கு உரிய ரூ.7,954,452 மீதி இருந்தது. எனினும் அதற்குரிய முதலீடு மற்றும் கிடைக்க வேண்டிய பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூ.5,775,029 ஆக மாத்திரம் இருந்தது. அதற்கிணங்க பொறுப்பினை தீர்ப்பதற்கு போதுமானளவு சொத்துக்கள் நிதியில் இருக்கவில்லை. இந்த நிதியினை ஆரம்பிக்கும் நோக்கம் தெளிவாகும் எவ்வித எழுத்து மூல தகவல்களும் பணியகத்திடம் இருக்கவில்லை என்பதுடன் நிதியின் முகாமைத்துவம் சம்பந்தமான ஒழுங்குமுறையான வேலைஒழுங்குகள் இல்லாது நிதி செயலிழக்கும் தன்மைக்கு உட்பட்டிருந்தது

(ஈ) 1990/1991 கல்ப் யுத்தம் காரணமாக இந்த வலயங்களில் தொழிலில் ஈடுப்பட்டுள்ள இலங்கையருக்கு நஷ்ட ஈட்டினை செலுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் நஷ்ட ஈட்டு ஆணைக்குழுவினால்கிடைக்கப் பெற்றிருந்த நஷ்ட ஈடுகளுக்கு உரிய நிதிக் கணக்கில் 2018 டிசம்பர் 31 ந் திகதிய மீதி ரூ.3,177,557,356 ஆகும். நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க 2018 டிசம்பர் 31 ந் திகதியில் நஷ்ட ஈட்டு உரித்தாளர்களுக்கு உண்மையில் செலுத்தப்பட வேண்டியிருந்த தொகை ரூ.251,453,848 ஆகும். இந்த நஷ்ட ஈட்டு தொகை பணியகத்திற்கு கிடைக்கப் பெற்று தற்பொழுது 20 வருடங்களுக்கி கிட்டிய காலங்கள் கடந்திருந்தாலும் அந்த நிதியினை செலுத்தி முடிவுறுத்துவதற்கு மற்றும் மேலதிக நிதி சம்பந்தமான தீர்மானம் எடுக்கப்பட்டு நிர்ணயம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அந்தத் தொகை பணியகத்தில் தக்க வைக்கப்பட்டு முதலீடு செய்யப்பட்டு வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(உ) இலங்கை சமூர்த்தி அதிகார சபை மற்றும் பணியகத்தின் பங்களிப்புடன் குடியகழ்ந்த தொழிலாளர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுக் கடன் யோசனைத் திட்டத்தின் கீழ், 2018 செப்தெம்பர் 20 ந் திகதியில் குடியகழ்ந்தவர்கள் 12,078 பேர்களுக்காக சமூர்த்தி வங்கி மூலம் ரூ.3,557 மில்லியன்கள் கடன் தொகை வழங்கப்பட்டிருந்த து. அதில் குடியகழ்ந்தவர்கள் 1,573 பேர்களுக்கு கடன் வழங்கும் நிபந்தனைகளுக்கு முரணாக மற்றும் எவ்வித பிணையும் வைத்துக் கொள்ளாது வழங்கப்பட்டிருந்த 360.27 மில்லியன் ரூபாய்கள் கடன் செலுத்துகை தவிர்க்கப்பட்டிருந்த து. இற்றை வரை உடன்படிக்கைக்கு இணங்கியதாக நடவடிக் கை மேற்கொள்ளப்படாமை, திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் பின்விபரம் மேற்கொள்ளலின் பலவீனம் போன்ற விடயங்கள் காரணமாக அந்த யோசனை முறைமை செயலிழந்து இருந்த து. மேற்படி விடயங்களுக்கு உரிய உடன்படிக்கையின் பிரகாரம் பணியகத்தின் பேரில் 100 மில்லியன் ரூபாய்கள் வைப்பு செய்தலுக்கு பதிலாக பணியகத்தினால் இலங்கை வங்கியில் சமூர்த்தி அதிகார சபை பெயரில் 100 மில்லியன் ரூபாய்கள் வைப்பிலிடல் காரணமாக அதற்கு உரிய வட்டியும் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் பணியகத்திற்கு கிடைக்காதிருந்தது.

(ஊ) வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையினுள் நிகழும் பல்வேறு செயலிழப்பினைக் கட்டுப்படுத்துவதற்காக அமைச்சரவை தீர்மானத்தின் பேரில் பணியகத்தில் விசேட விசாரணை அலகு ஆரம்பிக்கப்பட்டு 2018 டிசம்பர் 31 ந் திகதியில் பொலிஸ் அலுவலர்கள் 17 பேர்கள் உள்ளடங்கலாக அலுவலக ஆளனியினர் 36 பேர்கள் அதில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். கணக்காய்வு எழுமாறான பரிசீலனைக்கு உட்பட்ட 2017 ஆம் வருடத்தில் மற்றும் 2018 ஆம் வருடத்தில் 13 மாதங்கள் கால இடைவெளியினுள் வெளிநாட்டு தொழிலினை பெற்றுத் தருவதாக உறுதிப்படுத்தி ரூ.108,463,384 பெறுமதியான பணம் வஞ்சகம் செய்தலுக்குரிய முறையீடுகள் 274 அந்த அலகிற்கு கிடைக்கப் பெற்றிருந்த து. வெளிநாட்டு தொழிலினை பெற்றுத் தருவதற்கு உடன்பட்டதாக எழுத்து மூலம் உறுதிப்படுத்த இயலாதமையினால் அந்த முறையீடுகள் அந்த அலகினால் குறித்துக் கொண்டு உரிய பிரதேசங்களின் பொலிஸ் நிலையங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த து. எனினும் அந்த முறையீடுகள் சம்பந்தமாக பின்விபர நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்த துடன், அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட முறையீடுகள் 20 இல் அலகு மாத்திரம் தனிப்பட்ட தலையீட்டின் பேரில் தீர்வு கிடைத்து எனவும் ஏனைய முறையீடுகளுக்கான தீர்வு கிடைக்கவில்லை எனவும் கணக்காய்வின் எழுமாறான பரிசீலனையில் தெளிவாகியது.

(எ) வீசா கிடைத்த தன் பின்னர் வெளிநாடு செல்வதனை தள்ளுபடி செய்த தொழிலாளர்களுள் தமது தொழில் முகவர்களுக்கு செலுத்த வேண்டியதாக தீர்மானிக்கப்பட்டிருந்த ரூ.10,000 கட்டணம் ஒழுங்குமுறையான அடிப்படையில் மற்றும் பணிப்பாளர் சபையின் அனுமதி இன்றி 2017 டிசம்பர் 14 ந் திகதி தொடக்கம் ரூ.25,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

(ஏ) பணியகத்தின் சட்டத்திற்கிணங்க தொழிலுக்காக வெளிநாடு செல்லும் தொழிலாளர்களினை பயிற்றுவிப்பதன் மூலம் பணியகத்திற்கு வருமானம் உழைக்கும் இயலுமை இல்லாது போனாலும் பணியகத்தினால் மீளாய்வு வருடத்தினுள் அதனுள் மொத்தம் ரூ.74,985,198 இலாபம் உழைக்கப்பட்டிருந்தது. பயிற்சிக் கட்டணத்தினை தீர்மானிப்பதற்கு ஒழுங்கான முறைமை இல்லாதிருந்த துடன் சந்தர்ப்பத்தினை விட அதிகமாக கட்டணத்தனை அறவிடுவதற்கு பணியகத்தினால் இயலுமாகியிருந்த து. கணக்காய்வு எழுமாறான பரிசீலனைக்கு உட்பட்ட பண்ணிப்பிட்டிய பயிற்சி மத்திய நிலையத்தில் 07 நாட்கள் பயிற்சிக்காக அறிவிடப்பட்ட ரூ.8801 பயிற்சிக் கட்டணம் 02 நாட்கள் பயிற்சிக்காக அறவிடப்பட்டிருந்தது.

(ஐ) செலுத்தப்பட வேண்டிய செலவாக நீண்ட காலந் தொடக்கம் நிதிக் கூற்றிக்களில் முன் கொண்டு வரப்பட்ட நிலவும் கீழ் குறிப்பிடப்பட்ட மீதிகளினை நிர்ணயம் செய்வதற்கு மீளாய்வு வருடம் பூர்த்தியடையும் வரை பணியகத்திற்கு இயலாதிருந்த து.

(i) கொரியா வீசாக் கட்டணமாக 2015 ஆம் வருடத்தில் குடியகழ்ந்தவர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூ.6,640,400 தொகை

(ii) வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பிரதிநிதி நிறுவனங்களின் பதிவிற்கான கட்டணத்தில் 2015, 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களுக்கு உரிய மீண்டும் செலுத்தப்பட வேண்டியிருந்த மொத்தம் ரூ.149,826,492 தொகை

(iii) தங்காலை பயிற்சி மத்திய நிலையத்தில் அமைந்திருந்த காணிக்காக தங்காலை பிரதேச செயலகம் மூலம் 2015 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதிக்குரிய கூலியாக செலுத்தப்பட வேண்டியுள்ள ரூ.39,060,000 தொகை

(iv) 2016, 2017 வருடங்களுக்கு உரியதாக உணவு வழங்குநருக்கு செலுத்த வேண்டியுள்ள ரூ.1,776,569 தொகை

(ஒ) இற்றைக்கு 04 வருடங்களுக்கு முன்னர் மூடப்பட்ட ஜப்பான் தூதுவக் குழுவின் தொழிலாளர் நலனோம்பு பிரிவின் அலுவலர்களுக்கு தங்குமிட வசதிகளினைப் பெற்றுக் கொள்ளும் பொழுது வைப்பாக வைப்பு செய்யப்படும் 110,000 யென்களுக்கு சமமான ரூ.176,000 மட்டிலான தொகை மீள அறவிடப்படவில்லை என்பதுடன் இந்த தொகை கிடைக்க வேண்டிய மீதியாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2013 ஆம் வருடம் தொடக்கம் பணியகத்திற்குரிய கட்டிடத்தில் கொண்டு நடாத்தப்படும் ஓமான் தூதுவராலயத்திற்காக வாடகையாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த மொத்தம் ரூ.67,568,640 தொகையானது பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளாது வருமானத்தில் இருந்து நீக்கப்பட்டிருந்தது.

(ஔ) 2016 ஆம் ஆண்டின் ஆரம்பிக்கப்பட்ட 2017 ஏப்ரல் மாதம் வேலை முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த கதிர்காமம் விடுமுறை விடுதியின் நிர்மாண நடவடிக்கைகள் ரூ.119,617,558 செலவினைத் தாங்கி பூர்த்தி செய்யப்பட்டு 2019 ஆகஸ்ட் 28 கையளிக்கப்பட்டதாக கணக்காய்வில் காட்டப்பட்டிருந்தது. எனினும் போதுமானளவு நீர் வசதிகள் இன்மையின் பேரில் அந்த விடுமுறை விடுதி கணக்காய்வு தினமான 2019 நவம்பர் 01 ந் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாதிருந்தது.

(க) பணியகத்தினால் 2018 ஏப்ரல் 02 ந் திகதி ரூ.6,817,974 செலவுடனான திறைசேரி பிணை காலம் முதிர்ந்த தன் பின்னர் கொள்வனவு செய்தல் இடம்பெற்றுள்ளதுடன் அது பற்றிய தகவல்கள் உரிய கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அதற்குரிய ரூ.9,571 முதலீட்டு வருமானம் வங்கு கணக்கிற்கு கிடைக்கப் பெற்றிருந்தாலும் நிதிக் கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய மீதியாக காட்டப்பட்டிருந்தது.

(ங) தேசிய சேமிப்பு வங்கியின் கணக்கு இலக்கம் 100800442461 உடைய சேமிப்பு கணக்கில், இலங்கை வங்கி நிறுவனக்கிளையின் இலக்கம் 1650 உடைய நடைமுறைக் கணக்கிற்கு 2018 டிசம்பர் 24 ந் திகதி மாற்றப்பட்டிருந்த ரூ.23,000,000 தொகைக்கு உரிய கணக்கிற்கு அத்தினம் வரவு வைக்கப்பட வேண்டுமாயினும் 07 நாட்களின் பின்னர் வரவு வைக்கப்பட்டிருந்த து. மேற்படி தொகை நடைமுறை கணக்கில் வரவு வைக்கப்படாதிருந்தாலும், அந்த கணக்கில் நிகழ்த்தப்பட வேண்டிய கொடுப்பனவினை தீர்ப்பதற்கு தேவையான நிதி அளவினை விட விஞ்சி 43 மில்லியன் ரூபாய்கள் அதிகமான மீதி அந்த கணக்கில் இருந்த தாக 2018 டிசம்பர் 24 தொடக்கம் 2019 ஜனவரி 07 ந் திகதி வரை சேமிப்பு கணக்கில் அல்லது நடைமுறைக்கணக்கில் கணக்கிடப்படாமை மேலும் அவதானிக்கப்பட்டதுடன், இந்த த் தொகை குறுங்கால முதலீடுகளில் இடுவதன் மூலம் அந்த காலத்தில் நிலவும் வட்டி விகித த்திற்கு இணங்க ரூ.36,000 மட்டில் இலாபத்தினை உழைக்கக் கூடிய இயலுமை நிலவியது தெளிவாகியது.

(ச) குவைட் மற்றும் கட்டார் இராச்சியத்திற்கு தொழிலுக்காக உழைப்பாளர்களினை அனுப்பும் பொழுது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியத்தின் சான்றிதழின் பேரில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த பொலிஸ் தடை நீக்கல் அறிக்கை சாதாரண முறைமைக்கு இணங்க உரிய பொலிஸ் நிலையத்தின் மூலம்

வரவழைக்காது, தொழில் பிரதிநிதி நிறுவனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த து. இந்த நடைமுறையினுள் பல்வேறு முறையீணங்கள் நிகழுவதற்கு இடம் ஏற்பட்டிருந்த துடன் இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் காணாமல் போனதாக அறிக்கையிடப்பட்டிருந்த பொலிஸ் அறிக்கைப் புத்தகத்தினால் வழங்கப்பட்டிருந்த போலி பொலிஸ் தடைநீக்கல் சான்றிதழ்கள் 35 பணியகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு வெளிநாட்டு அலுவலர்கள் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த து. அவ்வாறே அவ்வாறு போலிச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தொழில் பிரதிநிதித்துவ நிறுவனத்திற்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் பணியகத்தினால் எடுக்கப்பட்டிராத துடன் மேற் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் அறிக்கையிடப்பட்டதன் பின்னரும் அந்த நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட தொழிலாளர்கள் 07 பேர்களுக்கு வெளிநாடு செல்வதற்கு பணிகம் வசதிகளினை வழங்கியிருந்தது.